**தலைப்பு - 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுன் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருப்பதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதித் திணைக்களத்தின் PED/RED/REG/02/CC/2022 மற்றும் 2022 மே 26 திகதிய கடிதத்தின் I பந்தி, 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 சுற்றறிக்கையின் 10 பந்தி மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வளர் நாயகத்திற்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் சமர்பிக்க வேண்டிய போதும், சட்ட அலுவல்கள் திணைக்களத்தினால் மேற் குறிப்பிட்ட சுற்றறிக்கை மற்றும் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023 பெப்ரவரி 28 திகதியளவிலும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், 2022 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் வரைபு 2023.04.03 திகதி சமர்ப்பித்துள்ளதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு சட்டம் மற்றும் ஏனைய சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஜுன் 10 – ஜுன் 18 இடையிலாக காலப் பகுதியினுள் காணாமல் போன மடிக் கணனி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(I), 104(3) மற்றும் 104(4) பிரகாரமான விசாரணை நடவடிக்கைகள் காலரீதியாக மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், இத் திணைக்களத்திற்கு சொந்தமான S/N 8HDJ4C2 – DELL LAPTOP கணனி காணாமல் போனது தொடர்பாக நி.பி 104(1) (அ) பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட காணாமல் போனது தொடர்பான விசாரணை மற்றும் | அரச நிதிப் பிரமாணங்களிற்கு இணங்க செயற்பட்டு நட்டத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்கு பொறுப்பு வாய்ந்தவர்களை நிச்சயித்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை பிரகாரம் இந்த மடிக் கணனி காணாமல் போனது தொடர்பாக பொறுப்புக்கூறக் கூயடிவர்களை தீர்மானித்தல் ஆரம்பமாக விஞ்ஞானரீதியான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளும் பொலீஸ் புலனாய்விற்கு இணங்க வேண்டியுள்ளதால், இந்த விடயத்துடன் தொடர்பான விசாரணை முன்னேற்றம் தொடர்பாக விடயங்களை பெற்றுத் தருமாறு கொட்டுவ பொலீஸ் நிலையத்திற்கு கடிதமொன்று அனுப்பியுள்ளதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 01/2014 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடங்க வேண்டிதாக குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டிற்குரியதான நாளாதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் கட்டமைப்பு, அங்கீகார ஆளணி மற்றும் தற்போதுள்ள ஆளணி மற்றும் வருடாந்த செயற்பாடுகளிற்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் போன்ற விடயங்கள் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது கூடிய முன்னுரிமை சட்ட அலுவல்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்காக வழங்கப்பட்டுள்ளது எனவும்,<br><br>• எதிர்வரும் ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது ஆண்டிற்குறிய நாளாது வரையாக்கப்பட்ட கட்டமைப்பு, அங்கீகரிக்ககப்பட்ட ஆளணி மற்றும் தற்போதுள்ள ஆளணி மீதான விபரங்கள்,<br><br>• வருடாந்த பெறுகைகள் திட்டத்தையும் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச நிதி சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச நிதி திணைக்கள இணையத்தில் காட்டியுள்ள வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கவுள்ள படிவம் பிரகாரம் பொறுப்புத் துறையில், பொறுப்புவாய்ந்த அலுவலர் மற்றும் காலப் பகுதி (சனவரி முதல் திசெம்பர் வரை) போன்ற விபரங்கள் உள்ளடக்கி செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதும், சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது குறித்த படிவம் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. | இத் திணைக்களத்தின் செயற்பாடுகள் பாதீட்டுடன் தொடர்புபட்ட நிதிசார செலவைக் கொண்ட செயற்பாடுகள் அல்லாததுடன் வழக்குகளை தீர்த்தல் மற்றும் சட்டங்களை அறிமுகஞ் செய்தல் போன்ற நிதிசாரா செயற்பாடுகள் எனவும், அவை அ.நி.சு 02/2020 சுற்றறிக்கை மூலம் அறிமுகஞ் செய்துள்ள வழிகாட்டியின் (ஆ) இன் கீழ் உள்ளடக்குவது கடினமெனவும், அதனால் திணைக்களத்தால் தயாரித்துக் கொண்ட படிவத்தின் பிரகாரம் செயற்பாடுகளை உள்ளிட்டு செயற்படுத்தும் காலப் பகுதியும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச நிதித் திணைக்கள ஆலோசனை பிரகாரம் திணைக்களத்திற்கு பொருத்தமான செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மற்றும் 2022 ஆண்டினுள் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டியதாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடங்கியிருந்த பின்வரும் சட்டங்கள் 2022 திசெம்பர் 31 திகதி வரையும் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>• 1951 இன் 38 இலக்க லோஹோர் சீமாட்டி கடன் நிதிய சட்டம்<br>• கொழும்பு பங்கு பரிவர்த்தனை Demutualization சட்டம்<br>• பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல் சட்டம்<br>• தேசிய பொறுப்பு பற்றுச் சீட்டு கட்டளை சட்டம்<br>• பதிவு செய்யப்பட்ட உரிமை மற்றும் பிணை கட்டளை சட்டம்<br>• 2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை சான்றளிக்கப்பட்ட | சட்ட நகழ் ஒன்றை பாராளுமன்றத்திற்கு சமர்பிப்பது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் ஒன்றாகையால் சில சட்ட நகழ்களை சமர்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவ்வாறே சட்ட நகழ்களை சமர்பிக்கும் செயற்தொடர் அதனுடன் தொடர்படும் பல நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டிய ஒன்றெனவும், அது திணைக்களத்தின் விருப்பின் மீது மாத்திரம் தங்கியில்லையெனவும், அவ்வாறே மாண்புமிகு சனாதிபதியின் அதிகாரம் பிரகாரம் ஒவ்வொறு நிறுவனங்களும் அவ்வப் போது அமைச்சின் கீழ் வர்த்தமாணிப்படுத்தியுள்ளதால் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட சில சட்ட நகழ்கள் வேறு அமைச்சுகளிற்கு அனுப்ப நேரிட்ட காரணத்தால் அச் சட்டங்களை பூர்த்தி செய்யும் பணிப்பொறுப்பு | வருடாந்த செயல் நடிக்கை திட்டத்தினுள் உள்ளடங்கும் விடயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ கணக்காளர் நிறுவன (திருத்த) சட்டம்<br>• சிரம வாசனா நிதிய சட்டம் | திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுவதில்லை எனவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டுமென 2021 மற்றும் 2022 வருடாந்த செயல் நடடிக்கை திட்டத்தினுள் உள்ளடங்கியிருந்த பின்வரும் 09 சட்டங்களிற்குரிய திருத்தங்களை 2022 திசெம்பர் 31 திகதியன்றும் மேற்கொண்டு பாராளுமன்றத்திற்கு சமர்பித்திருக்கவில்லை.<br>• 2006 இன் 05 இலக்க பண பதுக்கல் தடுக்கும் சட்டம்<br>• 2006 இன் 06 இலக்க நிதி கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடும் சட்டத்திற்கான திருத்தம்<br>• 2005 இன் 25 இலக்க பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலை தடுக்கும் இணக்க சட்டத்திற்கான திருத்தம்<br>• இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்திற்கான திருத்தம்<br>• கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தம்<br>• 2000 இன் 43 இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்கமைக்கும் சட்டத்திற்கான திருத்தம்<br>• 1989 இன் 13 இலக்க உற்பத்தி வரி (விஷேட ஏற்பாடுகள்) திருத்த சட்ட நகழ்<br>• 1995 இன் 15 இலக்க இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்திற்கான திருத்தம்<br>• 1990 இன் 02 இலக்க கடன் அறவிடும் (விஷேட ஏற்பாடுகள்) சட்ட திருத்தம் | சட்ட நகழ் ஒன்றை பாராளுமன்றத்திற்கு சமர்பிப்பது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் ஒன்றாகையால் சில சட்ட நகழ்களை சமர்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவ்வாறே சட்ட நகழ்களை சமர்பிக்கும் செயற்தொடர் அதனுடன் தொடர்படும் பல நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டிய ஒன்றெனவும், அது திணைக்களத்தின் விருப்பின் மீது மாத்திரம் தங்கியில்லையெனவும், அவ்வாறே மாண்புமிகு சனாதிபதியின் அதிகாரம் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங்களும் அவ்வப் போது அமைச்சின் கீழ் வர்த்தமாணிப்படுத்தியுள்ளதால் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட சில சட்ட நகழ்கள் வேறு அமைச்சுகளிற்கு அனுப்ப நேரிட்ட காரணத்தால் அச் சட்டங்களை பூர்த்தி செய்யும் பணிப்பொறுப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுவதில்லை எனவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடடிக்கை திட்டத்தினுள் உள்ளடங்கும் விடயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 மற்றும் 2022 வருடாந்த செயல் நடடிக்கை திட்டத்தின் பிரகாரம் கடன் ஒழுங்கமைக்கும் அதிகார சபையை அமைக்க வேண்டுமென உள்ளடக்கி இருந்த போதும் 2022 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த அதிகார சபையை அமைத்திருக்கவில்லை. அந்த அதிகார சபையை அமைப்பதற்கான இறுதி ஆவணங்களை பரீட்சித்துக் கொண்டிருப்பதாகவும் 02 வாரங்களினுள் அதனை பூர்த்தி செய்யவுள்ளதாகவும் 2022 ஜுன் 06 திகதி கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலாக அறிவித்திருந்த போதும் அந் நடவடிக்கைகள் 2023 மார்ச் வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | கடன் ஒழுங்கமைக்கும் அதிகார சபையை அமைப்பது மிகவும் சிக்கலான விடயமொன்றாவதுடன் தற்போது அது சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரல் தொடரிற்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் தொழிநுட்ப உதவியையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், 2021 ஆண்டில் கடன் ஒழுங்கமைப்பு அதிகார சபையை அமைப்பது தாமதமாவதற்கு காரணமானது அச் சட்டத்தில் உள்ள சிக்கலான தன்மை மற்றும் தொழிநுட்ப உதவி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு இறுதி இணக்கப்பாட்டிற்கு வரவில்லை எனவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | உத்தேச செயற்பாடுகளை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும. |
| (ஈ) | சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் 2021 திசெம்பர் 31 திகதி முடிவுறுத்தி இருக்காத வழக்குகளின் எண்ணிக்கை 381 ஆனதுடன், 2022 ஆண்டினுள் கிடைத்துள்ள வழங்குகளின் எண்ணிக்கை 77 ஆகும். அவற்றில் 06 வழக்குகள் 2022 ஆண்டினுள் தீர்க்கப்பட்டுள்ளதுடன், 2022 திசெம்பர் 31 திகதியளவில் முடிவடையாத வழக்குகளின் எண்ணிக்கை 452 ஆனது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு கிடைக்கும் வழங்குகளின் வேலைப் பணிகளை முடிவுறுத்த தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ள மற்றும் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் அவதானிப்புகளிற்காக கிடைத்துள்ள கடிதக் கோவைகளில் 09 கடிதக் கோவைகளின் வேலைப் பணிகள் 2022 திசெம்பர் 31 திகதி முடிவடைந்து இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் பரிந்துரை வழங்கலை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |

## 4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 இன் 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஊடாக அரச நிறுவனங்களில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் செயற்பட வேண்டிய முறை பற்றி வழங்கியுள்ள ஆலோசனைகள் பிரகாரம் செயற்பட்டிருக்ககாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறு. | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் நிறுவனத்திற்கு விஷேடமான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தலை செயற்படுத்தாமை தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், குறித்த விடய பொறுப்பு பதவியினர் இடமாற்றிச் சென்றமை, பின்னர் 2020 ஆண்டு முதல் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று மற்றும் எரிபொருள் பிரச்சினை போன்ற சந்தர்ப சூழ்நிலையான காரணங்களால் ஊழயிர்களின் தொடர்ச்சியான வருகையில் காணப்பட்ட பிரச்சினை மற்றும் பயிற்சியில் பங்குபற்றும் கடினத்தின் மீது இச் சுற்றறிக்கை பிரகாரம் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதும் அதனை நடைமுறை ரீதியாக செயற்படுத்த முடியாது போனதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | |
| (i) | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்க பந்தி பிரகாரம், ஆளணியின் செயலாற்றுகையை அதிகரிக்க திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள மொத்த ஆளணிக்காக வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை 2018 ஆண்டு முதல் கைச்சாத்திட வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | எவ்வாறாயினும் அனைத்து அலுவலர்களுக்கும் தமது தகைமையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய பயிற்சிகாக அனைத்து நேரங்களிலும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. வேறு சந்தர்ப்பங்களிலும் குறித்த ஊழயர்களின் கோரிக்கையின் மீது தேவையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், திணைக்கள சட்ட அலுவலர், வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் வழங்கும் உள்நாட்டு செயலமர்வு மற்றும் நிகழ்நிலை வெளிநாட்ட செயலமர்விற்கு அனுப்புவதனையும் தொடர்ந்து அரசிற்கு செலவுப் பொறுப்பு ஏற்படாத விதத்தில் மேற்கொண்டுள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பொது நிர்வாக சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டும். |
| (ii) | சுற்றறிக்கை பந்தி 04 பிரகாரம், திறன் வித்தியாசத்தை குறைத்துக் கொள்ள நிறுவனத்திற்கு விஷேடமான மனிதவள | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் நிறுவனத்திற்கு விஷேடமான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தலை | பொது நிர்வாக சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் திணைக்களத்தினால் அவ்வாறான மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | செயற்படுத்தாமை தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், குறித்த விடய பொறுப்பு பதவியினர் இடமாற்றிச் சென்றமை, பின்னர் 2020 ஆண்டு முதல் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று மற்றும் எரிபொருள் பிரச்சினை போன்ற சந்தர்ப்ப சூழ்நிலையான காரணங்களால் ஊழயிர்களின் தொடர்ச்சியான வருகையில் காணப்பட்ட பிரச்சினை மற்றும் பயிற்சியில் பங்குபற்றும் கடினத்தின் மீது இச் சுற்றறிக்கை பிரகாரம் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதும் அதனை நடைமுறை ரீதியாக செயற்படுத்த முடியாது போனதாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும் அனைத்து அலுவலர்களுக்கும் தமது தகைமையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய பயிற்சிகாக அனைத்து நேரங்களிலும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. வேறு சந்தர்ப்பங்களிலும் குறித்த ஊழயர்களின் கோரிக்கையின் மீது தேவையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும, திணைக்கள சட்ட அலுவலர், வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் வழங்கும் உள்நாட்டு செயலமர்வு மற்றும் நிகழ்நிலை வெளிநாட்ட செயலமர்விற்கு அனுப்புவதனையும் தொடர்ந்து அரசிற்கு செலவுப் பொறுப்பு ஏற்படாத விதத்தில் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

**(ஆ) இணைக்கப்பட்டுள்ள ஆளணி மற்றும் உள்ளவாறான ஆளணி**

| | | |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகார பதவி எண்ணிக்கை 22 ஆனதுடன், அவற்றில் 07 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அவ் வெற்றிடங்களிற்கிடையில், சிரேஷ்ட மட்ட 05 பதவிகள் காணப்பட்டது. | • வெற்றிடமாகவுள்ள 07 பதவிகளில் பணிப்பாளர் நாயக பதவி அமைச்சரமையினால் நியமிக்க வேண்டிய பதவியொன்றாகும். அமைச்சரமையினால் பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிக்கும் சந்தர்ப்பத்தில் வெற்றிடமாக ஏனைய சாரதி பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>• வெற்றிடமாகவுள்ள எஞ்சிய சிரேஷ்ட மட்ட 04 பதவிகளிற்கு மற்றும் இரண்டாம் மட்ட பதவிகளிற்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தின் கீழ் ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |